# அறிக்கை
# தேசிய பயிற்சிப் பட்டறை: SSF வழிகாட்டுதல்களும் இந்தியாவில் மீன் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களும்

நாங்கள் கடல் மற்றும் உள்நாட்டு மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மேற்கு வங்கம், தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கோவா கேரளாவைச் சேர்ந்த மீனவ சமூகங்கள் மற்றும் சங்கங்கள், கூட்டுறவுகள், தொழிற்சங்கங்கள், சுய உதவி குழுக்களின் பிரதிநிதிகள் ஆவோம். சிப்பிகளை, கடல் புற்களை, கரைக்கு அருகே உள்ள கடலிலிருந்து சேகரிப்பது, கரையின் மீன்களை உலர்த்துவது, தெருக்களிலும் வீட்டுக்கு வீடு சென்றும் மீன் விற்பது போன்றவற்றிலிருந்து பிரதானமாக எங்களின் வாழ்வாதாரத்தைச் சம்பாதிப்பவர்களாக நாங்கள் இருக்கிறோம்.

தமிழ்நாட்டின் சென்னை ஆஷா நிவாசில் 2022 8 முதல் 10 வரை நடைபெற்ற SSF வழிகாட்டுதல்களும் இந்தியாவில் மீன் தொழிலில் உள்ள பெண்களும் என்ற பயிற்சிப் பட்டறையில் நாங்கள் சந்தித்தோம். பாலின சமநிலை மற்றும் சரிநிகர் நிலையை பிரதானப்படுத்துவது, மீன்வள மதிப்பு கூட்டும் சங்கிலியில் பெண்களின் வாழ்வாதார இருத்தல் அனைவருக்கும் தென்படும் நிலைமையை மேம்படுத்துவதை நோக்கி நகர்வதற்கான ஒரு மேடையாக இந்த கூட்டம் அமைந்தது.

எங்கள் வாழ்க்கையிலும் வாழ்வாதாரத்திலும் கோவிட் 19 ஏற்படுத்திய பாதிப்புகளையும், பெருந்தொற்று இழப்பீடு மற்றும் மீண்டு வருவதற்கானவை போதுமானதா என்று மதிப்பீடு செய்வதாகவும் அது அமைந்தது.

எங்களின் மீன்பிடி, மீன் விற்பனை நடவடிக்கைகளில் ஆலை மாசுபாடுகளும், தீவிர பருவ நிகழ்வுகளும் ஏற்படுத்தும் பாதிப்புகளைக் கரிசனத்துடன் பார்ப்பதாக அது இருந்தது.

கடற்கரை சீரழிவு, மிகையாக மீன் பிடிப்பது, பெருந்தொற்று மற்றும் இயற்கை பேரிடர்களின் பாதிப்புகள் எவ்வாறு பொருத்தமற்ற அளவுக்கு அதிகமாக மீனவப் பெண்களைத் தாக்குகின்றன என்பதைக் கருத்தில் கொண்டது.

பெண்கள், குறிப்பாக, இயற்கைப் பொருட்களைச் சேகரிக்கும் பெண்கள் உள்ளூர் சத்துணவுக்கும், உணவுப் பாதுகாப்புக்கும் பங்களிப்பு செய்தபோதும், தொடர்ந்து மீன்பிடித் தொழிலின் மதிப்புக் கூட்டுச் சங்கிலிக்கு பங்களிப்பு செய்தாலும் தொடர்ந்து கவனிக்கப்படாதவர்களாகவே இருக்கிறார்கள் என்பதையும் கரிசனத்துடன் கவனத்தில் கொண்டது.

இவற்றின் அடிப்படையில், எங்களின் குறைபாடுகளையும் மீனவ அமைப்புகளின் குறைபாடுகளையும் களைவதற்காக தொழிற்சங்கங்கள், மாநில மற்றும் உள்ளூர் அதிகார அமைப்புகளின் கவனத்தை ஈர்க்கிறோம் :

1. மீனவர்களின் வாழ்வையும், வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதற்காக, கடல், கடற்கரை மற்றும் உள்நாட்டு உயிர் வள ஆதாரங்களைப் பாதுகாப்பதும், அவற்றைச் சென்று சேர்வதற்கான நிலத்தை அணுகுவதைப் பாதுகாப்பதும் ; இதற்காக, எண்ணெய் கசிவு, போக்குவரத்து, மணல் அள்ளுவது, பிளாஸ்டிக், சாக்கடை மற்றும் தொழிற்சாலை கழிவுகளால் ஏற்படும் அனைத்து வகையான நீர் மாசுபாட்டினையும் கையாளுவது ;
2. மத்திய மாநில மீன் வளக் கொள்கை, சட்டங்கள், திட்டங்களில் பெண்களுக்கு முன்னுரிமை கொடுப்பதை மேம்படுத்துவது; மீனவப் பெண்களுக்கு கிடைக்கக் கூடிய மாநில அளவிலான திட்டங்கள் குறித்த தகவல்களை மாநில மீன்வளத்துறை சேகரித்து, சரி பார்த்து, அவற்றைப் பகிர வேண்டும். மீன்பிடியில் உள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும், குறிப்பாக, பெண் தலைமையிலான குடும்பங்களுக்குப் பலன் தரும் வகையில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் அமைய வேண்டும். அதன் நிமித்தம் கையால் மீன் பிடிப்பவர்கள் மற்றும் பாசி சேகரிப்பவர்கள் உள்ளிட்ட பெண் மீனவர்கள், மீன்பிடியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் அனைவரையும் பதிவு செய்து, அவர்களுக்கு உரிமம் அளிக்க வேண்டும்; அவர்களைப் பற்றிய தரவுத் தொகுப்பு உருவாக்கிட வேண்டும்.
3. மகளிர்- குழந்தைகள் முன்னேற்றத்தில் மீனவ சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் பங்கெடுப்பதை மேம்படுத்த வேண்டும். மேலும், மீனவப் பெண்கள், மீன் பிடிக்கும் பெண் தொழிலாளர்களுக்குப் பலன் தரும் குறிப்பான திட்டங்களை சமூக வளர்ச்சித் துறைகள் வளர்த்தெடுக்க வேண்டும் ;
4. பல்வேறு மட்டங்களில் உள்ள மீனவர்கள், மீன் தொழிலாளர்களுடன் கலந்தாலோசிப்பதோடு, அவர்களின் பங்கெடுப்போடு சிறு வீத மீன்பிடிக்கான தேசிய வழிகாட்டுதல்களையும், மீன்பிடியில் உள்ள பெண்களுக்கான தேசிய கொள்கைகளையும் வளர்த்தெடுக்க வேண்டும்;
5. கடற்கரை மற்றும் ஆற்றங்கரை சார்ந்த பகுதிகளுக்குப் பொருந்தும் எந்த கொள்கையிலும் பாரம்பரிய மீனவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதாக அமைய வேண்டும். மேலும், சமூகத்துடனான, குறிப்பாக பெண்களுடனான கலந்தாலோசனையின் மூலம் அவ்வாறான கொள்கைகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்;
6. சுற்றுச்சூழல், மீன் வளம், வனம், கானுயிர் தொடர்பான அனைத்து சட்ட ஆவணங்களிலும், வாழிடம் மற்றும் வீட்டுவசதி குறித்த அனைத்து உள்ளூர் சட்டங்களிலும் மீனவ சமூகங்களின் பாரம்பரிய மற்றும் நடப்பிலுள்ள மீன் பிடி/ நில உமைகளை அங்கீகரிக்க வேண்டும், மதித்து நடக்க வேண்டும் ;
7. சிறிய கண்ணி கொண்ட வலைகள், லெட் விளக்குகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதைத் தடுத்திடுங்கள். தற்போதைய தலைமுறைக்கும், எதிர்கால தலைமுறைகளுக்கும் மீன் வள ஆதாரங்கள் கிடைக்கும் வகைக்கு, அழிவுகரமான மீன்பிடியையைக் கட்டுக்குள் கொண்டு வாருங்கள்;

8. பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரத்திற்காக மீன் பிடிப்பதற்கும் கடல், கடற்கரை ஓரத்தைப் பாதுகாப்பதற்கும் இடையில் ஏற்படும் மோதல்களைக் குறையுங்கள்; இந்த விவகாரத்தில், பழங்குடிகள் மற்றும் வன வாழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் வன உரிமைச் சட்டம் 2006ஐ அமலாக்கம் செய்யுங்கள் ;
9. அகழ்வாராய்ச்சிகள், கடலிலிருந்து வளங்களை எடுப்பது, கடல், கடற்கரையோரம் ஆற்றங்கரைகளில் வளர்ச்சித் திட்டங்களைக் கொண்டுவரும்போது மீனவ சமூகங்கள் முன்கூட்டிய விவரம் அறிந்து ஒப்புதல் அளிக்கும் முறையை உறுதி செய்வது ; மேலும், பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், பெண் மீனவர்கள், மீனவப் பெண்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதார நலன்களைக் கணக்கில்கொண்டு போதுமான இழப்பீடு அளிக்கப்பட வேண்டும்;
10. உள்ளூர் அரசதிகார அமைப்புகள் உருவாக்கும் பொதுப்பயன்பாடு கட்டமைப்புகளை, அவற்றுக்கான நீர், மின்சாரம், சுத்தம், துப்புரவு மேம்படுவதற்கு, பெண்கள் உடல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் பாதுகாக்கும் வகையில் அவை அமைவதை உறுதிசெய்வதற்கு, பெண் மீனவர்கள் மீன் தொழிலாளர்களின் கலந்தாலோசனையோடு வலுப்படுத்தும் நடவடிக்டிகளை மேற்கொள்ளுங்கள் ; மீன்களை சேமித்து வைப்பது/ பதனப்படுத்துவதில் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் வகையிலான தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்யுங்கள் ;
11. சந்தையின் வெளிகளில் பெண் மீன் வியாபாரிகளின் உரிமைகளைப் பாதுகாத்திடுங்கள் மேலும் அவர்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து சந்தைகளை ம வளர்ச்சி றுவடிவமைப்பு செய்வதை மேற்கொள்ளுங்கள் ;
12. தெருவில் மீன் விற்கும் பெண்களுக்கான இடங்களை உறுதி செய்யுங்கள், மேலும் தெருவோர வியாபாரிகள் வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் தெரு வியாபாரத்தை கட்டுப்படுத்தும் சட்டம் 2014யை (Street Vendors (Protection of Livelihoods and Regulation of Street Vending- 2014) நடைமுறைப்படுத்துங்கள்;
13. மலிவான செலவில், பொருத்தமான சந்தைகளை பெண்கள் சென்று சேர்வதற்கு வசதியாக பொதுப் போக்குவரத்து வசதி அளியுங்கள் ;
14. பெண் மீனவர்கள், மீன் பிடியில் உள்ள பெண் தொழிலாளர்களின் தேவையின் அளவுக்கு விகிதாச்சார ரீதியாக பொருத்தமான வகையில் மீன்வள திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடும் இருப்பதை உறுதி செய்யுங்கள். அவை உரிய கால நிர்ணயத்தில் அளிக்கப்படுவதையும் உறுதி செய்யுங்கள். இப்பிரச்சனையில் பெண் மீனவர்கள், மீன் பிடியில் உள்ள பெண் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்புக்கான உரிமையை முழுமையான இனம் காண்பதில் உள்ள இடைவெளிகளைக் களையும் வகையில் நடைமுறைகளை மேம்படுத்துங்கள் ;
15. கல்விப் பலன்கள், ஓய்வூதியப் பலன்கள், மரணம் நேர்ந்தமைக்கான பலன்கள், மீன்பிடி தடைக்காலப் பலன்கள், பருவநிலை மாற்றம்/

மாசுபாட்டின் தாக்கத்தை ஈடு செய்வதற்கான பலன்கள் போன்றவற்றில் பெண் மீனவர்கள், மீன் பிடியில் உள்ள பெண் தொழிலாளர்களுக்கு போதுமான சமூகப் பாதுகாப்பு பலன் கிடைப்பதை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் ;

16. பெருந்தொற்றுகள் உள்ளிட்ட பேரிடர்களின்போது அளிக்கப்படும் இழப்பீடுகளும் கூட இத்தொழிலில் உள்ள பெண்களுடன் கலந்தாலோசனை செய்து அளிக்கப்படுவதாக இருப்பதை உறுதி செய்யுங்கள் ;
17. சமூக வளர்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதிலும், நிதி ஒதுக்கீட்டிலும் பெண்கள் பங்கெடுப்பதை உறுதி செய்யும் வகையில் உள்ளாட்சி நிர்வாக முறைகளுக்குத் திறன் அளியுங்கள்;
18. தேசிய மீன்பிடி புள்ளிவிவரத்தில் பெண்கள் உற்பத்தி செய்யும் மீனின் அளவு முழுமையும் பிரதிபலிக்கும்படி செய்யுங்கள். இதற்காக கையால் மீன்பிடிப்பது, பாசி எடுப்பது உள்ளிட்ட தொழில் பிரிவுகளிலும், மையப்படுத்தப்படாத புள்ளி விவர சேகரிப்பு முறையை மேம்படுத்துங்கள் ;
19. மீனவர் அமைப்புகளிலும் பாரம்பரிய மீனவ சமூக அமைப்புகளிலும், முடிவெடுக்கும் முறையில் பெண் மீனவர்கள், மீன் பிடியில் உள்ள பெண் தொழிலாளர்களின் பங்கெடுப்பு பலன் தரும் வகையில் இருப்பதை உறுதி செய்ய அழுத்தம் கொடுங்கள் ;

பெண் மீனவர்கள், மற்றும் மீனவ சமூகத்தின் பிரதிநிதிகளாகிய நாங்கள், கைத்தொழில் மீன்பிடி மற்றும் நீருயிர் வளர்ப்பு சர்வதேச ஆண்டின் சமயத்தில், உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்ற சூழலில், நிலைத்த சிறுவீத மீன்பிடியைப் பாதுகாப்பதற்கான தன்னார்வ வழிகாட்டுதல்களின்படி, இந்த செயல்பாட்டு அம்சங்களை அமலாக்கம் செய்ய வேண்டும் என்று வேண்டுகிறோம்.